நோர்வே தமிழர் சுகாதார அமைப்பு
Norsk tamilsk helseorganisasjon
Norwegian Tamil Health Organisation

# நோர்வே பொதுசுகாதார நிறுவனத்தின் (FHI) கொறோனாத் தடுப்பூசி நிகழ்வுத்திட்டப் புதுப்பிக்கப்பட்ட தகவல்கள்

புரட்டாதி (september) 2022







**இலையுதிர்க்கால / பனிக்கால நிர்ப்பீடனப் புத்துயிர்ப்பாக்கித் தடுப்பூசி வழங்கல்**

65 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவரையும் கொறோனாவிற்கான புத்துயிர்ப்பாக்கித் தடுப்பூசியை (oppfriskningsdose) இப்பொழுது பெற்றுக் கொள்ளுமாறு நோர்வே பொதுசுகாதார நிறுவனம் (FHI) பரிந்துரைக்கிறது.

நீங்கள் 65 வயது அல்லது அதற்கும் கூடியவர்களாயிருந்து கொறோனாத் தொற்றுக்கு (கோவிட்-19) அண்மையில் உட்பட்டு இருந்தாலும் புத்துயிர்ப்பாக்கித் தடுப்பூசியை 3 வாரங்களின் பின்னர் பெற்றுக்கொள்ளுமாறு கூறப்படுகிறது.

இறுதியாகப் பெற்றுக்கொண்ட கொறோனாத் தடுப்பூசிக்கும் புதிய புத்துயிர்ப்பாக்கித் தடுப்பூசிக்கும் இடையே குறைந்தது 4 மாத இடைவெளி இருக்கவேண்டும்.

இலவச கொறோனாத் தடுப்பூசியை இப்பொழுது பெற்றுக்கொள்வதன்மூலம் தீவிர தாக்கத்திலிருந்து நீங்கள் பாதுகாக்கப்படும் தன்மையும் காலமும் நீடிக்கப்படுகிறது.

நோர்வே தமிழர் சுகாதார அமைப்பு
Norsk tamilsk helseorganisasjon
Norwegian Tamil Health Organisation

**நோர்வேயில் புதிய - மேம்படுத்தப்பட்ட கொறோனாத் தடுப்பூசி கிடைக்கவுள்ளது**

ஐரோப்பிய மருந்துகளுக்கான அதிகாரசபையினால் அண்மையில் BioNTech/Pfizer (Comirnaty) மற்றும் Modena (Spikevax) ஆகிய இரண்டுவகை மேம்படுத்தப்பட்ட கொறோனாத் தடுப்பூசிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் தடுப்பூசிகள் ஆரம்பகால மற்றும் இப்போது சுழற்சியிலுள்ள புதியவகைக் கொறோனா வைரஸ் வகைகளுக்கும் (Omikron) ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ளது. நீங்கள் அண்மைக்காலத்தில்தான் ஆரம்பகாலப் புத்துயிர்ப்பாக்கித் தடுப்பூசியைப் பெற்றிருந்தால் அது உங்களைப் பாரிய சுகவீனத்திலிருந்து பாதுகாக்கும், எனவே மேம்படுத்தப்பட்ட தடுப்பூசி இப்பொழுது தேவையில்லை.

மேம்படுத்தப்பட்ட தடுப்பூசிகளாலும் ஆரம்பகாலத் தடுப்பூசிகளாலும் ஏற்படும் பக்கவிளைவுகள் பெரும்பாலும் ஒரேமாதிரியானவையாகவே உள்ளன. நீங்கள் புதிய மேம்படுத்தப்பட்ட புத்துயிர்ப்பாக்கித் தடுப்பூசியைப் போட விரும்பாவிடின் ஆரம்பகாலத் தடுப்பூசிவகையில் ஒன்றைத் தரும்படி தடுப்பூசி வழங்கப்படும் இடத்தில் கேட்டுக்கொள்ளலாம்.

மேம்படுத்தப்பட்ட மற்றும் புத்துயிர்ப்பாக்கித் தடுப்பூசி பற்றிய விரிவான விளக்கங்கள் மற்றும் பரிந்துரைகளை அறிந்துகொள்ள பின்வரும் இணையத்தை நாடவும்: https://www.fhi.no/sv/vaksine/koronavaksinasjonsprogrammet/koronavaksine/#oppfriskningsdoser

**சில அடிப்படைத் தகவல்கள்**

- கொறோனாத் தடுப்பூசி, கொறோனா வைரஸ்சினால் ஏற்படும் பாரிய சுகவீனம் அல்லது தாக்கத்திலிருந்து பாதுகாக்கிறது.
- தடுப்பூசியை முன்னர் பெறாதவர்களும் இப்பொழுதிலிருந்து பெற்றுக்கொள்வது நன்று.
- தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள நீங்கள் வசிக்கும் உள்-ஊர்ச் சபைகளுடன் (நகரசபை kommune) தொடர்பு கொள்ளவும்.
- கொறோனாத் தடுப்பூசி மற்றும் வழங்கல் இலவசமாகும்.
- வதிவிடத் தகமைகளுக்கு (oppholdsstatus) அப்பாற்பட்டு, நோர்வேயில் இருக்கும் அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் உரிமையுடையவர்களாவர்.
- சுகாதார உதவிகளை நீங்கள் நோர்வேயில் பெறும்பொழுது மொழிபெயர்ப்பு உதவியைப்பெறும் உரிமையும் உங்களுக்கு உண்டு.
- சுயவிருப்பு அடிப்படையிலேயே நோர்வேயில் தடுப்பூசிகள் வழங்கப்படுகிறது.

நோர்வே தமிழர் சுகாதார அமைப்பு
**Norsk tamilsk helseorganisasjon**
Norwegian Tamil Health Organisation

சுகாதாரப் பணிப்பகத்தால் (Helsedirektoratet) இயக்கப்பட்ட «கொறோனாத் தொலைபேசி» நிறுத்தப்பட்டுள்ளது. «Helsenorge»யின் வழிகாட்டற் தொலைபேசி இலக்கம் 23 32 70 00 அல்லது அதன் இணைய நேரடித் தொடர்பாடல்மூலம் (chat) கொறோனா அத்தாட்சிப்பத்திரம் மற்றும் கொறோனா தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் நகரசபையையும் நாடலாம். பார்வையிடவும்: https://www.helsenorge.no/koronavirus/

மேலதிக விபரங்களுக்கு:
https://www.fhi.no/nettpub/koronavaksinasjonsveilederen-for-kommuner-og-helseforetak/koronavaksinasjon-i-kommunene/informasjonsmateriell-til-kommuner/?term=&h=1